IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.38/2021

Deposition of Witness : PW-1

Name : பாண்டியராஜன்

Father's Name /W/o : த/பெ. பீமாரெட்டி என்கிற துரைசாமி ரெட்டியார்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : மோசூர் கிராமம், அரக்கோணம் வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 09.01.2024

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. தாவா சொத்து முத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. சொத்து ஆதியில் கந்தசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் இருக்கலாம். 22.08.1898 ல் எல்லப்பரெட்டி மனைவி கன்னியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கன்னியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து அவரது மகன் துலுக்கான ரெட்டிக்கு சென்றது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. துலுக்கான ரெட்டிக்கு கோபால்ரெட்டி, வாசுதேவ ரெட்டி, ஜெயராம ரெட்டி மற்றும் ஸ்ரீதர் ஆகியோர் மகன்கள் என்றாலும் இந்த சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனவே அவர்கள் சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டார் என்றால் இல்லை. அந்த நான்கு நபர்களும் சொத்தை சொக்கலிங்கம் மற்றும் சுந்தரவதனம் என்பவர்களுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சுந்தரவதனம் தான் தற்போது இந்த சொத்திற்கு உரிமையாளர் என்றால் இல்லை அவருக்கு உரிமையில்லை.

2. என்னுடைய பலத்தை வைத்து சொத்து என்னுடையது என்று நான் அங்கு வீடு கட்டிக்கொண்டேன் என்றால் நான் எந்த தவறான முறையிலும் செய்யவில்லை. சுந்தரவதனம் காவல் நிலையத்தில் எங்கள் பெயரில் புகார் கொடுத்தும் போலீசாருக்கு கீழ்படியாமல் வேண்டுமென்றே வீட்டை கட்டியுள்ளார் என்றால் தவறு. இந்த வழக்கில் கண்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. அரசாங்கத்தை ஏமாற்றி பட்டா வாங்கியுள்னேன் என்றால் சரியல்ல. பட்டாவும் ஆவணங்களும் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. சொத்து முத்தம்மாளுக்கு சொந்தமானது இல்லை என்றாலும் கன்னியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.